மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

மாணவியர் விடுதி

***5091—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

2018 ஜூன் 1]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இப்பேரவையிலே கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நான் சார்ந்திருக்கின்ற வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி, இராயகிரி பேரூராட்சிப் பகுதியில் அதிகமான மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே அரசு உதவிபெறும் ஒரு மேல்நிலைப் பள்ளியும், அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. அந்தப் பேரூராட்சிப் பகுதிக்கு அருகில் இருக்கக்கூடிய சுற்று வட்டாரப் பகுதியிலே இருக்கக்கூடிய கிராமங்களில் 2 மேல்நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் சிறப்பான முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதைப்போல நடுநிலைப் பள்ளிகளும் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே பயின்று வருகின்ற மாணவ, மாணவிகள் நலன் கருதி, அந்தப் பகுதியிலே ஓர் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்துக் கொடுக்கும்பட்சத்தில், அந்த மாணவ மாணவியர்களுடைய தேர்ச்சி விகிதம் இன்னும் கூடுதலாக இருக்கும். ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்துத் தந்தால் மாணவியர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்ற அடிப்படையில், அங்கேயொரு மாணவியர் விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 53 விடுதிகள்*

செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை 3,040 ஆகும். 2017-2018 ஆம் ஆண்டில் 2,255 மாணவ, மாணவியர்கள் விடுதியில் தங்கிப் பயனடைந்துள்ளனர். தற்போது 4 விடுதிகள் மட்டும் வாடகை கட்டடங்களிலும், இதர விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதியில், 4 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. மேலும், இராயகிரி பேரூராட்சியில் 8 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அப்பள்ளிகளில் மொத்தம் 460 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுள் 198 மாணவியர் வெளியூரிலிருந்து வந்து கல்வி பயில்கின்றனர். மாநிலம் முழுவதும் பெருவாரியான கிராமங்கள் மற்றும் நகரங்களில் மாணவ, மாணவியர் கல்வி கற்கத் தேவையான உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-55

இப்பள்ளிகள்மூலம் தடையின்றி கல்வி பயில கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை, விலையில்லா மிதிவண்டி போன்ற வசதிகள் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 1,343 விடுதிகளில், 1,112 விடுதிகள் பள்ளி விடுதிகள் ஆகும். இந்தச் சூழ்நிலையில், வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.

திரு. அ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அதிகமான மாணவிகள் படித்துக் கொண்டிருந்தாலும்கூட, அவர்களது பெற்றோர் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகின்ற காரணத்தால், அவர்களது குழந்தைகள் சொந்தக் கிராமத்தில் படிக்க இயலாமல் சொந்தபந்தங்கள் வீட்டில் இருந்து படிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த மாணவிகளின் நலன்

2018 ஜூன் 1]

கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே ஒரு பெண்கள் விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். வருங்காலங்களில் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது குறித்து திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து உரிய கருத்துருவினை பெற்று, தேவையின் அடிப்படையிலும், அரசின் நிதிநிலைமைக்கேற்பவும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்கவுள்ளார்கள். அது முடிந்தவுடன் உங்களை அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) பிறகு எடுத்துக்கொள்கிறேன். பிறகு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*